மதுரை சிறப்பு அங்காடி

*463 வினு.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை சிறப்பு அங்காடியில் எத்தனை பேர்கள் பணியாற்றி வருகிருர்கள்?

(இ) அவர்களுக்கு, மாதத்துக்கு எவ்வளவு பணம் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 122 பேர்கள்.

(இ) ரூ. 12,691.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை சிறப்பு அங்காடி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதே, அதற்குக் காரணம் அங்கே அதிகமான பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதுதான் என்கிற கருத்து உலவுகிறது. ஆகவே அங்குள்ள ஆட்களைக் குறைத்து நஷ்டத்தை ஈடு செய்ய அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் அங்கே அதிகமான பேர்கள் இருக்கிருர்கள் என்பது மட்டும் அல்ல, வேறு காரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதுபற்றி சட்டமன்றத்தில் ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது. முன்பு 140 பேர்கள் இருந்தார்கள். அந்த எண்ணிக்கையும் 122 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தொடர்ந்து தேவையில்லாதவர்களை எடுத்துவிடவேண்டும் என்றும் அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடியை மாவட்டந்தோறும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா? வேலூரில் ஆரம்பிக்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் மொத்தம் எவ்வளவு சிறப்பு அங்காடிகள் அமைக்கலாம் என்று மத்திய சர்க்கார் சொல்லுகிருர்கள். சில சிறப்பு அங்காடிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. வேலூரில் பரிசீலிக்கப்படலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை சிறப்பு அங்காடியைப் பற்றி திரு. சுரேந்திரன் அவர்கள் கேட்பார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சிறப்பு அங்காடியில் வேலை செய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற குறைந்த சம்பளம் எவ்வளவு ? அது அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சம்பள விகித விவரம் பொதுவாக இல்லை. மதுரை சிறப்பு அங்காடியைப் பற்றி மட்டும் தான் இருக்கிறது. மற்றக் கடைகளில் கொடுக்கப்படுகிற சம்பளத்தை விட இதில் அதிகமாகக் கொடுக்கிருர்கள். இது சரிதானு என்பதைக்கூடப் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறேன்.

1967 நவம்பர் 27]

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை சிறப்பு அங்காடியில் தற்போது நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் அதிகமான வாடகையுள்ள கட்டடத்தில் அது இருப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. அதை குறைந்த வாடகையுள்ள கட்டடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பல காரணங்களில் அதுவும் ஒன்று. இந்த ஆண்டு அந்தக் கட்டடத்திற்கு வாடகையைக் குறைத்திருக்கிறது.

DR. H. V. HANDE: Will the Hon. Minister tell us the exact reasons in detail for these Supermarkets to run at a loss?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி அறிக்கை ஒன்றை ஏற்கனவே திரு. சீமைச்சாமி கேட்ட கேள்விக்குத் தந்திருக்கிறேன். பொதுவாக எட்டு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் பம்பாயில் போய் ஜவுளியை வாங்கி, அது இங்கே தேங்கும்படியாகச் செய்துவிட்டதுதான். கட்டட வாடகையும் ஒரு காரணம். இந்தக் காரணங்களை எல்லாம் ஆராய்ந்து அவற்றுக்குப் பொறுப்பான சூழ்நிலை நீக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க மருத்துவ மனை, அரக்கோணம்

*464 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குரிய மருத்துவத் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் நகரத்தில் அரசாங்க மருத்துவ மனையில் கூடுதலாக படுக்கை வசதிகள் பெருக்கவும், மருத்துவ மனையை விஸ்தரிக்கவும் திட்டமிட்டு நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு (Emergency) நிறுத்தி வைக்கப்பட்டதை மீண்டும் எடுத்து நடத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசின் நிதி நிலை வசதியான பின் இந்த விஷயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அரக்கோண நகர ஆஸ்பத்திரியில் முன்பு இருந்த படுக்கை வசதிகள்தான் இப்போதும் இருக்கின்றன. முன்பு இருந்த அமைச்சரவையை, படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டோம். அதற்குள் எமர்ஜன்ஸி வந்துவிட்டது. இப்போதுதான் அது நீக்கப்பட்டுவிட்டதே. ஆகையால் அரக்கோண நகர ஆஸ்பத்திரியில் படுக்கை வசதியை அதிகப்படுத்த இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் நிதிநிலைமை சரிப்பட்டதும் அது கவனிக்கப்படும்.